**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.368/2023**
**Prosecution Witness - PW8**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கோபாலகிருஷ்ணன் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.09.2025.

(A1 and A2 are present. )

முதல் விசாரணை–

நான் பறையன் விளை ஊரில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி சிவகுமார் மனைவி லதாவை எனக்கு தெரியும். சம்பவம் நடந்த சமயத்தில் நான் கேரளாவில் தங்கி கொத்தனார் வேலை பார்த்து கொண்டிருந்தேன். சம்வத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பும் நான் கேரளாவில் தான் இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 5.09.2015 ம் தேதி காலை 8.30 மணிக்கு நானும் , எங்கள் ஊர் சிவகுமார் மனைவி லதா என்வரும் ராஜி என்பவர் வீட்டு பக்கம் உள்ள பஞ்சாயத்து தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடித்துக்கொண்டு இருந்தோம். அப்போது சாந்தி , அவரின் அப்பா ராஜீ, அம்மா இசக்கியம்மாள் மற்றும் கணேசன் மனைவி கிருஷ்ணவேணி ஆகியோர்கள் சேர்ந்து நின்று கெட்ட வார்த்தையில் பேசி ஒரே வீட்டில் இருந்துவிட்டு மாமனார் மாமியாருக்கு சாப்பாடு கொடுக்காமல், சொத்தை எழுதி கேட்கிறாயா என்று தகறாறு செய்யும் இவளால் ஒரு நாளும் நிம்மதியாக இருக்க முடியவில்லை என்றும், அவளை மண்ணெண்ணெய்

ஊற்றி கொளுத்தி கொன்றால் அவளாக செத்ததாக நினைப்பார்கள் என்று பேசிகொண்டிருந்தார்கள்என்றும், நாங்களும் அவர்கள் குடும்ப விஷயமாக இருந்ததினால் கண்டுகொள்ளாமல் இருந்தோம் என்றும், பின்னர் வளர்மதியை , சாந்தி கடந்த 07.09.2015 அன்று காலை மண்ணெண்ணெய் ஊற்றி தீவைத்து கொளுத்தி சிகிட்சைக்கு சேர்த்துள்ளதாக கேள்வி பட்டேன் என்றும், பின்னர் ஒரு மாதகாலமாகியும் வளர்மதி குணமாகி வராததால் நானும், லதாவும், ஆசாரிபள்ளம் மருத்துவகல்லுரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எதிரிகள் மண்ணெண்ணெய் ஊற்றி வளர்மதியின் இடது பக்க காலில் இருந்து, இடது தோள்பட்டை வரை வெந்து புண்ணாகியிருந்ததை பார்த்து எதிரிகள் திட்டம் தீட்டியதை வளர்மதியிடம் சொன்னேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நானும் ஆஜர் எதிரிகளும் சுமூகமான உறவில் இருப்பதன் காரணமாக, மேற்படி உண்மைகளை மறைத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**